https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# குறுந்தொகையில் நெஞ்சோடு கிளத்தல்

**ஜெ. தனலட்சுமி**
உதவிப்பேராசிரியர்
மொழிகள் துறை – தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர் – 641021.

**Abstract**

When discussing people's way of life according to Tamil literary tradition, it can be categorized into two types: inner life (*அகவாழ்வு*) and outer life (*புறவாழ்வு*). When this is discussed based on the divisions of Tamil literary genres (*திணை*), the inner life is referred to as "*அகத்தினை*" and the outer life as "*புறத்தினை*." In one of the books of the Eight Anthologies (*எட்டுத்தொகை*), namely Kuruntokai, the love and marital life of the hero and heroine is depicted. Even when the heroine stands with virtue or when facing emotional separation, in the hero's poems, he expresses that he cannot bear to be separated from her. Through these events, both the hero and heroine engage in inner dialogue, and the emotions of separation and longing are explored. This article examines these occurrences where the hero and heroine converse with their hearts, leading to emotional conflict.

**ஆய்வுச் சுருக்கம்**

*மக்களின் வாழ்க்கை முறையை தமிழ் நூல் முறைப்படி பகுக்கும் போது அகவாழ்வு, புறவாழ்வு என இரு வகைப்படுத்தலாம். இதனைத் திணை அடிப்படையில் பேசும்போது அகவாழ்வைப் பற்றிக் கூறுவதை அகத்தினை என்றும் புறவாழ்வைப் பற்றிக் கூறுவதை புறத்தினை என்றும் கூறலாம். எட்டுத்தொகை அகத்திணை நூல்களில் ஒன்றான குறுந்தொகையில் தலைவன், தலைவி இருவரின் காதல் மற்றும் திருமண வாழ்க்கையில் நிகழும் நெஞ்சோடு கிளத்தல் நிகழ்வுகள், தலைவி அறத்தோடு நிற்கும் பொழுதும் இற்செறிப்பின் பொழுதும் தலைவன் இடந்தலைப் பாட்டில் தலைவியைப் பிரிய இயலாத நிலையிலும் ஆகிய நிகழ்வுகளில் தலைவன், தலைவி இருவரும் தன் நெஞ்சுடன் பேசிக்கொண்டு நெஞ்சோடு கிளத்தல் நடைபெறுவதை இக்கட்டுரை ஆய்கிறது.*

**திறவுச் சொற்கள்:** *நெஞ்சம், அறத்தொடு நிற்றல்,இற்செறிப்பு,இடந்தலைப்பாடு*

## முன்னுரை

*ஆணும் பெண்ணும் அன்போடு ஒன்றுபட்டுக் கூடி வாழும் காதல் வாழ்வே அக வாழ்வாகும். அது அவர்கள் உள்ளத்தால் உணரும் ஒப்பற்ற இன்பமாகும். இவ்வாறு வாழும் மாந்தர்களின் வாழ்வில் காணப்படும் நெஞ்சோடு கிளத்தல் பற்றி குறுந்தொகையில் காணலாகும் செய்திகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

## நெஞ்சோடு கிளத்தல்

*களவு மற்றும் கற்புக் காலங்களில் தலைவன் தலைவியைப் பிரிய நேரிடும்போது அப்பிரிவினைத் தாங்க இயலாது ஆற்றாமையின் காரணமாக நெஞ்சோடு புலம்புதல் இருவருக்கும் ஏற்படுகிறது. மேலும் தலைமக்களை எண்ணித் தோழி, செவிலி, நற்றாய், புலம்புவதும் காணப்படுகின்றது.*

## நெஞ்சோடு கிளத்தல் அகராதி விளக்கம்

“நெஞ்சு - ஒருமம், துணிவு, தைரியம், மனம்

கிளத்தல் - எலும்பல், சொல்லுதல்
(தமிழ்மொழியகராதி ப.321)

நெஞ்சம் - மனம், மார்பு

நெஞ்சு - நடு, மறம், மாப்பு
(தமிழ்மொழியகராதி ப.384)

**நெஞ்சோடு கிளத்தல் பற்றி உரையாசிரியர்களின் கருத்து**

**தொல்காப்பியர்**

தலைமக்கள் இருவருக்கும் மனம் ஒன்றிப் போன நிலையில் ஒருவரை ஒருவர் நினைத்து தங்கள் நெஞ்சோடு புலம்பிக் கொள்வது குறித்து த் தொல்காப்பியர்,

**ஒரு சிறை நெஞ்சோடு உசாவும் காலை**
**ஊறிய தாகலும் உண்டென மொழிப**
(தொல்காப்பியம், பொருள்.நூ. 194)

என்று தலைவி தனித்த நிலையில் தன் நெஞ்சோடு புலம்பும் காலத்துத் தலைவனைச் சாரல் வேண்டும் என்கிறார். மேலும்,

**"நோயும் இன்பமும் இருவகை நிலையில்**
**காமம் கண்ணிய மரபிடை தெரிய**
**எட்டன் பகுதியும் விளங்க ஓட்டிய**
**உறுப்புடை யதுபோல் உணர்வுடையது போல்**
**மறுத்துரைப் பதுபோல், நெஞ்சோடு புணர்த்தும்"**
(தொல்காப்பியம், பொருள்.நூ. 194)

இன்பமோ துன்பமோ அளவிற்கு மிகுந்த நிலையில் அருகில் இருந்து கேட்போர் இல்லாத நிலையில் எதிரில் இருப்பன கேட்பன போலவும் பதில் கூறுவன போலவும் எண்ணித் தன் மன உணர்வுகளை வெளிப்படுத்திக் கூறுவது ஒருபாற் கிளவியாகும்.

**நெஞ்சோடு கிளத்தல் - கவிஞர் கருத்து**

**கவிஞர் - சக்தி ஜோதி**

சங்க இலக்கியத்தின் அகத்துறைப் பாடல்கள் சில நெஞ்சோடு கிளத்தல் என்னும் துறையைச் சார்ந்தவை. இவை தலைவி அல்லது தலைவன் தனது நெஞ்சுக்குத் தான் உரைப்பது என்னும் பொருளில் வெளிப் படும் அதேபோன்று இக்கால கட்டத்தைச் சேர்ந்த,

கடலோடு இசைதல் என்னும் கவிதை தொகுப்பில் நெஞ்சோடு கிளத்தல் என்னும் தலைப்பில்

**"நான் பெண்**
**நிலவல்ல**
**நான்**
**உயிர்ப்புடனிருப்பவள்**
**ஆயிரம் ஆயிரம் சூரியன்களைப்**
**பெற்றெடுக்கும் பெண்**
**நிலவல்ல"**

என்ற கவிஞர் சக்தி ஜோதியின் இக்கவிதை தன் நெஞ்சோடு புலம்பி உரைப்பதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**தலைவி நெஞ்சோடு கிளத்தல்**

சங்க இலக்கியத்தில் தலைமகளாய் வைத்துப் போற்றப்படும் தலைவியைத் தலைவன் பொருள் தேடும் பொருட்டும். வினையின் பொருட்டும் பிரிந்து செல்கிறான். தலைவனது பிரிவைத் தலைவி பொறுத்து இருக்கிறாள். இருப்பினும் தலைவன் வருவதாகக் கூறிச் சென்ற காலத்தில் வராமல் காலம் தாழ்த்துகிறான். அதனால் வருந்திய தலைவி தன் நெஞ்சுடன் பேசிக் கொள்கிறாள்.

**இலக்கணங்கள் சுட்டும் தலைவி**

அகத்திணை என்னும் வட்டத்திற்கு மையப் புள்ளியாக விளங்குபவள் தலைவி அத்தகைய தலைவிக்குரிய இலக்கணமாகத் தொல்காப்பியர்,

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறத்தல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"**
(தொல்காப்பியம், பொருள்.நூ. 96)

என்ற தொல்காப்பிய நூற்பாவில் அச்சம், நாணம், மடம் என்ற மூன்று பண்புகளும் எக்காலத்திற்கும் உரிய பெண்ணிற்கு உரியன என்பதை தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார்.

**தலைவி அறத்தோடு நிற்க இயலாத நிலையில் நெஞ்சோடு கிளத்தல்**

தலைவி, தலைவன் மீது கொண்டுள்ள களவு ஒழுக்கம் குறித்து தன் பெற்றோருக்கு அறிவித்தலே அறத்தொடு நிற்றல் ஆகும்.

**இதனைப் பேராசிரியர் வ. சுப. மாணிக்கனார் "அறம் எனப்படுவது பல பண்புகளையும் தழுவிய பொதுச் சொல்லா யினும் ஈண்டு பெண்ணுக்கு உரிய முதற் பண்பான கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப் பிடியில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப்படுத்துதல் என்பது இத்துறையின் பொருள்"**– (தமிழ்க்காதல் ப.58)

என்று கூறியிருக்கிறார். ஆனால் இவ்வாறு அறத்துடன் நிற்க இயலாத நிலையில் காப்பு மிகுதியால் தலைவி, தனக்குள்ளே தோழி அறத்துடன் நிற்க வேண்டும் என்று

கூறுவதாக,

"………………….. **களைதலை அவர் ஆற்றலரே**
**உயித்தனர் விடா ஆர் பிரிந்து**
**இடைகளையார்**
**களைவோர் இலையான் உற்ற**
**நோயே"** (குறுந்தொகை பாடல்.305)

என்ற பாடலில் தலைவி தனக்குள்ளே நடக்கின்ற மனப்போராட்டத்தைக் குப்பைக் கோழியின் சண்டையைப் போன்றது என்றும் அதனை நீக்க யாரும் இல்லை, தன் நெஞ்சமே துணையாக அமைந்தது என்றும் எண்ணுகிறாள். இவ்வாறு துன்பத்திற்கு நெஞ்சம் துணையாக அமைவதைத் திருவள்ளுவரும்,

**"துன்பத்திற் கியாரே துணையாவார்**
**தாமுடைய**
**நெஞ்சம் துணையல் வழி"** (திருக்குறள்.1299)

என்ற குறளில் துன்பம் வரும் பொழுது அதனைத் தாங்க நெஞ்சம் துணையாக இல்லாது போனால் வேறு யார் துணையாக இருப்பார் எனக் கூறியுள்ளார்.

## இற்செறிப்பின் போது தலைவி தன் நெஞ்சுக்கு சொல்லியது

"தலைவன் மீது தலைவி கொண்ட களவு வாழ்வு குறித்து தலைவியின் செய்கை, உடல் மாற்றம் போன்றவற்றால் நற்றாய் மற்றும் செவிலிக்கு ஐயம் தோன்றுகிறது. மேலும் ஊர் அலரால் தலைவியின் காதல் நடவடிக்கை பற்றி சந்தேகம் தோன்றி வீட்டில் இருந்து வெளியே செல்ல இயலாதபடி தலைவியை இல்லத்தில் காவலில் வைப்பது இற்செறிப்பு ஆகும். **தலைவனோடு தலைவி கொள்ளும் இன்ப உறவுக்கும். பெருந்தடையாக இருப்பது இற்செறிப்பு"**

(அகத்திணை மாந்தாகள் ஓர் ஆய்வு ப.60)

இவ்வாறு இற்செறிப்பில் அவதியுறும் தலைவி தன் எண்ணத்திற்குக் கட்டுப்பாடாகத் தன் நெஞ்சினை,

**"மெல்லிய இனிய மேவரு தகுந**
**இவை மொழியாம் எனச் சொல்லியும்,**
**அவை நீ**
**மறத்தியோ வாழி என் நெஞ்சே**
**தென் கடல் சேர்ப்பனைக் கண்ட பின்னே"**
(குறுந்தொகை பாடல். 306)

என்ற பாடலில் தலைவன் தலைவியின் துன்பமான நிலையைப் புரிந்து கொள்ளாமல் வரைவு நீட்டிக்கிறான். இந்நிலையில் தலைவன் வரும்பொழுது மென்மையான இனிய சிறந்த மொழிகளைப் பேசக்கூடாது என்று கூறியும் தலைவியின் நெஞ்சம் கட்டளையை மீறி விடுகிறது.

## பகற்குறி வந்து மீள்வான் தலைவி தன் நெஞ்சுக்குச் சொல்லியது

தலைவனும் தலைவியும் களவு காலத்துக் கூடும் பகற்குறிக்கு உரிய இடம் தலைவிக்கு நன்கு தெரிந்த இடமாகவும் மதிற்புறத்திற்கு வெளியேயும் அமைந்திருக்கும். இதனைத் தொல்காப்பியர்,

**பகற்புணர் களனே முன்னர் என மொழிப**
**அவள் அறிவுரை வருவழியான்**
(தொல்காப்பியம் நூற்பா.130)

இவ்வாறு குறியிடம் குறித்துத் தலைவன் பகற்குறியில் தலைவியை சந்தித்து சென்ற பிறகு அவனுடைய பிரிவைத் தாங்க இயலாதவளாய் தலைவி தன் நெஞ்சிடம், ஞாயிறு மறைந்து இருள் வரத் தொடங்கியது கொண்கனொடு ஆடிய பொழிலின் பொலிவு குன்றியது. தலைவனின் தேரும் மறைந்த இக்காதலரோடு இருந்த கடற்கரைச் சோலை என்னவாகுமோ என்று தலைவி நெஞ்சமழிந்து கூறுவதனை,

**ஊது வண்டு இமிரும் கோதை மார்பின்**
**மின் இவர் கொடும் பூண், கொண்கனொடு**
**இன் நகை மேலி, நாம் ஆடிய பொழிலே**
(நற்றிணை பாடல்.187)

என்ற நற்றினைப் பாடல் எடுத்துக்காட்டு கின்றது. இதேபோன்று தனது பூப்புக்காலத் தில் தலைவனைப் பிரிந்திருக்க அஞ்சிய தலைவி தன் உண்மை நிலையை மறைத்து தனது தோளைத் தழுவும் காதலரைப் பிரியச் செய்யும் வாள் போன்று காலைப் பொழுது வந்தது என்று மாற்றிக் கூறுவதாக,

**குக்கூ என்றது தோழி, அதன் எதிர்**
**துட்கென்றன்று என் தூது நெஞ்சம்**
**தோள் தோய் காதலர்கள் பிரிக்கும்**
**வாள் போல் வைகறை வந்தன்றால் எனவே**
(குறுந்தொகை பாடல்.157)

என்ற குறுந்தொகைப் பாடலும் அமைந்து ள்ளது.

## தலைவியின் உள்ளத் திண்மை

தலைவன் பெரும் பரத்தனாயினும் அவன் நெஞ்சம் விரும்பியவளாகத் தான் மட்டுமே திகழ வேண்டும் என்னும் விருப்பத்தினைக்

கொண்டவளாகத் தலைவி திகழ்கிறாள். ஆனால் பிரப்பம் கொடியில் காய்த்துப் பழுத்த கனியை எளிதாகக் கெண்டை கவரும். அதுபோல தன்னுடைய சிறப்பால் அன்பும் செல்வமும் பெற்ற தலைவனைப் பரத்தையர் கவர்ந்து கொள்கின்றனர். அவ்வாறு சென்ற தலைவன் மீண்டு வந்த காலத்து அவனிடம் தான் ஊடல் கொண்டாலும் தன் நெஞ்சம் அவனிடம் செல்வதை உணர்ந்த தலைவி,

**"கடும் பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி**
**கொன் முனை இரவு ஊர் போலச்**
**சில ஆகுக நீ குஞ்சும் நாளே"**

(குறுந்தொகை பாடல்.91)

என்று நீ அவனோடு பழகுவாயானால் மீண்டும் அவன் பிரிந்து சென்றால் வரும் துன்பத்தால் நீ துயிலும் நாட்கள் சிலவாகும். என்று கடிந்து கொள்வதாக இப்பாடல் அமைந்துள்ளது.

## தலைவன் நெஞ்சொடு கிளத்தல்

சங்க இலக்கியத்தில் தலைவிக்கு அடுத்த நிலையில் வைத்து போற்றப்படுபவன் தலைவன். அகத்திணையில் தலைவனுக்கென தனிச்சிறப்பிடம் உண்டு. தலைவன் தலைவியை விட்டு நீங்காது இருப்பதையே விரும்புவான் ஆனால் வாழ்க்கைக்குத் தேவையான பொருளீட்டும் பொருட்டும், வேந்தன் பொருட்டும், வினைக்குச் செல்லும்போதும் தலைவியைப் பிரிகின்றான். தன்னைப் பிரிந்து இருக்கும் தலைவியின் நிலையினை எண்ணி வருந்துகின்ற தலைவன் தன் நெஞ்சிடம் பேசுவான்.

## இடந்தலைப் பாட்டில் தலைவன் புலம்புவது

தலைவனும் தலைவியும் எதிர்பாராத விதமாக ஒரு நாள் சந்தித்து இருவர் உள்ளமும் புணர்ந்து காதலரான பின் மீண்டும் அதே இடத்தில் சந்திக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர் இதனை வா. சுப. மாணிக்கனார் புதிய உறவை மீண்டும் ஒருமுறை கழித்துக் காண்பதே இடந்தலைப் பாடு என்கிறார். இவ்வாறு இயற்கை புணர்ச்சியின் போது தலைவியைத் தழுவிய தலைவன்,

**நறிய நல்லோள் மேனி**
**முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே**

(தொல்காப்பியம் நூற்பா.1044)

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைப் பெற்று இன்புற்றது போல இடந்தலைப் பாட்டின் கண்ணும் அவளைப் பெற்று மகிழ விரும்பிய தலைவன் தன் நெஞ்சிடம் பேசுவதாக இப்பாடல் அமைகிறது.

## தலைவியைப் பிரிய இயலாத நிலை

பொருள் தேடத் துணியும் நெஞ்சிடம் தலைவியைப் பிரிந்து செல்லுதல் இயலாது என்று கூறுவதை,

**"ஈதலும் துய்த்தலும் இல்லோருக்கு இல் எனச்**
**செய்வினை கைம்மிக எண்ணுதி அவ்வினைக்கு**
**அம் மா அரிவையும் வருமோ?**
**எம்மை உய்த்தியோ? உரைத்திசின் நெஞ்சே!"**

(குறுந்தொகை பாடல்.62)

என ஈட்டிய பொருளால் பெறக்கூடிய இன்பத்தை எண்ணி இப்போது தலைவி யோடு பெற்று வரும் இன்பத்தை இழக்க விரும்ப மாட்டேன் என தலைவன் தன் நெஞ்சுக்குச் சொல்லியதாக இப்பாடல் அமைகிறது.

## முடிவுரை

நெஞ்சோடு கிளத்தல் என்னும் துறையில் நெஞ்சோடு கிளத்தல் களவு மற்றும் கற்பு காலங்களில் தலைவன் தலைவியைப் பிரிதலின் போது நடைபெறும் என்பதை அறிய முடிகின்றது. மேலும் தலைவன் பொருள் தேடும் பொருட்டும் வினையின் பொருட்டும் மட்டுமே தலைவியைப் பிரிவான் என்பதையும் அறிய முடிகின்றது.

## துணைநூற்பட்டியல்

1. ந.கதிர்வேற்பிள்ளை, தமிழ் சொல்லகராதி, சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு -1998.
2. ந.கதிர்வேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி, சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு -1996.
3. இளம்பூரணார்.தொல்காப்பியம் (பொருளதிகாரம்) சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு-1999.
4. வ.சு.ப மாணிக்கனார், தமிழ்க்காதல், இந்து புக் பார்க், முதற்பதிப்பு-2003.
5. பிரேமா.இரா (உ.ஆ) - குறுந்தொகை, வர்த்தமானன் பதிப்பகம், முதற்பதிப்பு-1995.
6. திருக்குறள் மூலமும் உரையும், அருணா பப்ளிகேஷன்ஸ், முதற்பதிப்பு -2020.
7. ஆ.இராமகிருட்டிணன், அகத்திணை மாந்தர்கள் ஓர் ஆய்வு, முதற்பதிப்பு-2017.